# As delivered

## துணைத் தூதுவர் ரொபர்ட் ஹில்டனின் உரை
## அமெரிக்கத் தூதுரகம், கொழும்பு இலங்கை

## கலாசார பாதுகாப்புக்கான தூதுவரின் நிதியம் (AFCP) நிறைவு நிகழ்வு
## காலி கோட்டை உலக பாரம்பரிய தலம் ஆவணப்படுத்தல்

**செப்ரம்பர் 26, 2016**
**மெரிடைம் அருங்காட்சியகம், காலி கோட்டை, காலி**

அனைவருக்கும் மாலை வணக்கங்கள்! இந்த நிகழ்வை ஒழுங்கு செய்வதற்கு உதவிய அனைவருக்கும் நன்றிகள்!

செயற்றிட்ட துணை பணிப்பாளர்களான பேராசிரியர் பி.பீ மன்டாவல மற்றும் கட்டடக் கலைஞர் பிரசன்ன இரத்நாயக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சம்பத் அமரதுங்க, மத்திய கலாசார நிதியத்தின் நண்பர்கள், காலி மெரிடைம் அரும்பொருள் காட்சியகம், காலி பாரம்பரிய நிதியம் மற்றும் ஏனைய அதிதிகளுக்கும் எனது நன்றிகள். வருகை தந்துள்ள கட்டட உரிமையாளர்களுக்கும் நன்றிகள். காலி கோட்டையின் அங்கமான உடைமைகளில் வாழும் மற்றும் பணியாற்றும் கௌரவம் மற்றும் பொறுப்பினை நீங்கள் பெற்றுள்ளீர்கள். இந்த செயற்றிட்டத்துடன் உங்களுடைய ஒத்துழைப்பையும், இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பகுதியை பாதுகாப்பதற்கான உங்களுடைய முயற்சிகளையும் நாம் வரவேற்கின்றோம். உங்களுக்கும், உங்களுடைய எதிர்கால தலைமுறையினருக்கும் பணி செய்வதற்கான மற்றும் வாழ்வதற்கான, கற்பதற்கான மற்றும் வழிபாடு செய்வதற்கு உகந்த இடங்களாக உடைமைகள் இருக்க வேண்டும் என்பதனை நாம் அங்கீகரிக்கின்றோம். இலங்கையின் தென்பகுதியில், குறிப்பாக காலி நகரில் இருப்பது உண்மையில் எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இலங்கை மக்களின் விருந்தோம்பல் மாத்திரமன்றி, இயற்கை அழகு

மற்றும் பல்வகை நிர்மாண பாரம்பரியங்களின் காரணமாகவும் நாட்டின் மிகவும் முக்கியமான சுற்றுலா தளங்களில் ஒன்றாக இது உள்ளது.

இலங்கையில் பல்வகைத்தன்மை கொண்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை பாதுகாப்பதற்கு நிதி வழங்குவது எமக்கு பெருமையான, அதே சந்தர்ப்பத்தில் சவால் மிக்க விடயமாகும். பாதுகாப்பதற்கான பல முக்கிய தளங்களும், முன்னெடுப்பதற்கான பல செயற்றிட்டங்களும் உள்ளன. எனது அரசாங்கத்தினாலும், அமெரிக்க மக்களாலும் முன்னெடுக்கப்பட்டு வரும் உறுதிப்பாட்டினையும் நீங்கள் வரவேற்பீர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எமது காங்கிரஸினால் 2001ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது முதல், கலாசார பாதுகாப்புக்கான தூதுவரின் நிதியமானது (AFCP) இலங்கை உள்ளடங்கலாக 125இற்கும் மேற்பட்ட நாடுகளில், 950இற்கும் மேற்பட்ட செயற்றிட்டங்களை வழங்கியுள்ளது. உலகெங்கிலும் கலாசார பாரம்பரியத்தை காப்பதற்கு 60 மில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட அர்பணிப்பினை அது குறிக்கின்றது. மிகவும் முக்கியமாக, வேறு நாடுகளில் கலாசார பாரம்பரியத்திற்கான எமது தேசத்தின் ஆழமான மதிப்பினை வெளிப்படுத்துகின்றன.

எனது தூதரகத்தினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட முதலாவது முயற்சி இதுவல்ல. இலங்கை நடனத்தில் நான்கு பாரம்பரிய நடனங்களை அழியாது காப்பதற்கு இந்த மாதத்தின் ஆரம்பத்தில் புதிய நன்கொடை ஒன்று வழங்கப்பட்டது. தூதுவரின் நிதியத்தின் கீழ் நாம் 12 செயற்றிட்டங்களுக்கு உதவியுள்ளோம். 2005ஆம் ஆண்டில் மாத்தறையில் டச்சு கோட்டையின் உள்ளே சுனாமியால் பாதிக்கப்பட்ட கலாசார உடைமைகளின் ஆய்வுக்கான நன்கொடையும் இந்த செயற்றிட்டங்களில் உள்ளடங்குகின்றது. 2008ஆம் ஆண்டில் இலங்கையில் விவரணப் படங்களினை பாதுகாப்பதற்கு எமது செயற்றிட்டம் உதவியது. 2013

மற்றும் 2015இல் நன்கொடையானது கிழக்கு மாகாணத்தில் ரஜகல அருகில் பாரிய பௌத்த மடாலயத் தொகுதியை பாதுகாப்பதற்கு உதவியது. இலங்கையில் இவை அனைத்தினதும் மொத்த பெறுமதி 900,000 அமெரிக்க டொலர்களாகும்.

உங்களுக்கு ஏற்கனவே தெரிந்துள்ள வகையில், போர்த்துகேயர் 1500களில் இந்தப் பகுதியில் தமது முதலாவது கோட்டையை அமைத்தனர். 1640ஆம் ஆண்டு ஒல்லாந்தர் கட்டுப்பாட்டில் காலி கோட்டை வந்த போது, இன்று இவ்வளவு பாரியதாக விரிந்துள்ள நிர்மாணத்தை கட்டி முடித்தனர். இவை மிகச் சிறந்தது எனவும், ஆசியா முழுவதிலும் ஐரோப்பியர்கள் நிர்மாணித்த அரண் நகரங்களில் சிறப்பானது எனவும் சிலர் கூறுகின்றனர். தமது முக்கியத்துவத்திற்காக சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாக டச்சு கோட்டை உள்ளது. 1988ஆம் ஆண்டில் உலக பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாக இந்த கோட்டையை யுனெஸ்கோ உள்ளடக்கியது.

காலி கோட்டையில் தொடர்ந்து தாக்கம் செலுத்தி வரும் இயற்கை மற்றும் மனித மாற்றங்களை நாம் புறக்கணிக்க முடியாது என்பதனை நாம் அறிந்துள்ளோம். 100,000 அமெரிக்க டொலர்கள் நன்கொடை உதவி நிகழ்ச்சி இன்று நிறைவுக்கு வருகின்றது. கோட்டைக்குகள் வரலாற்று சிறப்பு மிக்க கட்டடங்களை ஆவணப்படுத்துவதற்கு, கட்டடக்கலை சார் சிறப்பம்சங்களை நீண்ட காலம் பாதுகாப்பதற்கான உபாயம் ஒன்றை உருவாக்குவதற்கு மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க பகுதிக்குள் அபிவிருத்தியை வழிநடத்துவதற்கான திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் வழிநடத்தப்பட்ட பணியை இன்று நாம் கொண்டாடுகின்றோம்.

இந்த சிறந்த செயற்றிட்டத்தில் பணியாற்றிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களும், நன்றிகளும் உரித்தாகட்டும். இந்த செயற்றிட்டத்தின் ஊடாக

உருவாக்கப்பட்ட திட்டத்தின் மூலம், நகர அதிகாரிகளும், ஏனைய பங்குதாரர்களும் காலிக்கான சாதகமான பொருளாதார வளர்ச்சியையும், தனித்துவமான கலாசார பாரம்பரியமாக கோட்டைப் பகுதியை பாதுகாப்பதற்கு முக்கியமான சுற்றுலாத் தளமாக பேணுவதற்கும் உதவும். அமெரிக்கா மற்றும் இலங்கை மக்களுக்கு இடையிலான வலுவான உறவினை பிரதிபலிப்பதாக இந்த முயற்சிகள் உள்ளன.

அனைவருக்கும் நன்றி.